பழைமைப் புழுக்கள் நெளியும் பத்தாம் பசலிக் கொள்கையர்!

சுகபோக சுரண்டல் கூட்டத்துக்குப் வளைந்து கொடுக்கும் முதுகெலும்பற்றோர்!

:0:

இந்திய 'சுயராஜ்யம்' லண்டனில் அம்பலமாகிறது

(0)

சமூக விடுதலை தொலை தூரம்; பொருளாதார நிலை படுமோசம்

இந்திய மக்கள் சமுதாய விடுதலையினின்றும் நீண்ட தொலைவிலுள்ளனர். கடந்த சில பலவாண்டுகளாக இந்தியாவின் பொருளாதார நிலை மிகமிகக் கேவலமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

எங்கள் நாட்டு சர்க்கார் நல்லெண்ண மிக்கோராயிருக்கலாம். ஆனால் அவர்கள் பழைய பத்தாம் பசலிக் கொள்கையிலேயே கட்டுண்டு கிடக்கின்றனரே! கடந்த 150 ஆண்டுகளாக நிலைபெற்றுவரும் முறைகளைத் தகர்த்தெறியும் துணிவு கொள்ள அவர்களுக்கு மனமில்லை. அத்துணை உள்ள உரம்படைத்தவர்களல்லர் அவர்கள்.

எங்கள் நாட்டு சர்க்கார் ஏகபோக ஆதிக்க சுயநலக் கும்பலின் இயக்கத்தைச் சேர்ந்தோராவார். அவர்களுக்கு நல்லெண்ண மிருப்பினும், நாட்டில் நிலைபெற்றுவரும் பட்டினி, பசி, வறுமை துயரம் அவலம், பிணி இன்ன பிறவற்றைப் போக்க அவர்களால் இயலாது.

என்னுடைய நாடு எல்லாவகையிலும் வளம்பெற்ற நாடேயாகும். கடனுக்காக மடிப்பிச்சை யேந்திச் செல்ல வேண்டிய அவசியமே அணுவளவும் கிடையாது.

லண்டனில் நடைபெறும் சுதந்தர உலகத் தொழிலாளர் மாநாட்டில் கலந்துகொள்ள இங்கிருந்து சென்றிருக்கும் இந்திய பஸ்தூர் சபையைச் சேர்ந்த தோழியர் மணிபென் காரா, பலவேறு நாடுகளின் பிரதிநிதிகள் மாந்திருந்த நேரத்தில் தன்னுடைய சர்க்காரைப் பற்றித் தந்த 'சர்டிபிகேட்டின்' ஒரு பகுதியினை மேலே தந்துள்ளோம். சுதந்திரம் பெற்று, 'சுயராஜ்ய'த்தில் ஈடுபட்டிருக்கும் நம்முடைய சர்க்கார் பற்றிய பட்டப் பிடிப்பு வேறுமாதிரியாக இருக்குமென்றுதான் பலவேறு நாட்டுப் பிரதிநிதிகளும் நினைத்திருக்கக்கூடும்! ஆனால் தோழியர் மணிபென் காராவின் பட்டப்பிடிப்பு அதிருப்திச் சூழ்நிலையை உள்ளடக்கி யிருப்பது கண்டு வியப்பே கொண்டிருப்பர்!

தோழியர் காரா மேலும் சொன்னார்: இந்தியாவில் பொருளாதார நெருக்கடி காரணமாக, மூலதனச் செலவினங்கள் ரூ. 80 கோடிகளுக்கு மேல் குறைக்கப்பட்டன. அதாவது பொது மராமத்து வேலைகள், நீர்ப்பாசனமுறைகள், விவசாய நில அபிவிருத்தித் திட்டங்கள் ஆகியன பிற மூலையில் ஒதுக்கப்பட்டுப் போகின்றன. அடுத்த பட்ஜெட்டில் நேரடி வரியினங்களைக் குறைத்துவிடுகிறோமென்று தொழில் முதலாளிகளுக்கு வாக்குறுதியும் அளித்து விட்டனர்!

"நமது இந்திய ஸ்தாபனத்தை அரசியல் சூதாட்டக்காரரின் சொக்கட்டானாயாக ஆக்கிவிடவேண்டாம். பலமிக்க ஜனநாயக முன்னணி யொன்றினால் மட்டுமே உலகில் அமைதியை நிலைநாட்ட முடியுமென உங்களுக்கு எடுத்துணர்த்த ஆசைப்படுகிறேன்.

ஆட்சி பீடமேறி யிருப்போர் நல்ல மனிதர்கள் தாம். சாவத்தைப்புகழும் செலவாக்கும் மிக்கவர்கள் தாம். பொதுத் தொண்டுக்கென்றே புறப்பட்டுவிட்ட 'புனிதர்கள்' தாம்! சமதர்ம கோட்பாடுகளில் நம்பிக்கையுள்ள நல்ல மனம் படைத்தோர் திராவகத்திலுள்ளார்தாம்! இருந்தும் என செய்வது" என்று ஏக்கமும் துக்கமும் கலந்த தொனியில் பேசியுள்ளார் தோழியர் காரா. அந்த 'சுத்தமான' வித்தகர்கள் அவ்வண்ணம் கொள்கை திரிந்துகாட்சியளிப்பதற்கான காரணத்தையும் விண்டுள்ளார் விளக்கமாக. நல்ல மனமிருந்தும் அவர்கள் பற்றுக்கோட்டுக் காரணமுள்ள ஸ்தாபனம் பிற்போக்குப் பேய்கள் தலைவிரித்தாடும், பழமைப் புழுக்கள் நெளியும் அமைப்பாகத் திகழ்கிறது. அவர்கள் என் செய்வர் — ஏகபோக சுரண்டல் வெறியர்களின் இயக்கத்தின் காவலர்களாக, பிரதிநிதிகளாகத்தானே நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை யேற்றிருக்கின்றனர் என்று தெளிவாக எடுத்துரைத்துள்ளார் தோழியர்.

தேசிய ஸ்தாபனமென்பது தோன்றிய 'வண்டவாளமே' அதுதானென்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

Phone No. 4502 | Regd. No. M. 545[illegible]
விலை அணா ஒன்று | இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAIMANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1 | சென்னை (6-12-49) | வெளியீடு (7-12-49) | இதழ் 109

காங்கிரஸ் மேலிடத்தை யெதிர்த்து கர்நாடக காங்கிரஸ் 'கச்சை' கட்டுகிறது!

மாகாண, மத்திய எம். எல். ஏ. க்கள், 'கூண்டோடு' ராஜிநாமா!

"தியாகம் பல செய்து, தனி மாகாணம் நிறுவ வாரீர்!"

"காங்கிரஸ் செல்வாக்கு கரைந்துவிட்டது"

—மாகாண காங்கிரஸ் தீர்மானம்

"கர்நாடக மாகாணத்தை நிறுவித்தர காங்கிரஸ் காரியக் கமிட்டி தவறிவிட்டதை"க் கண்டிக்கும்வகையில், மாகாண மத்திய சட்டசபைகளைச் சேர்ந்த 12 கர்நாடக உறுப்பினர்கள் தங்கள் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்துவிட்டனர். கர்நாடக மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கவுன்சில் கூட்டத்தில் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டது. மத்திய பார்லிமென்டரி போர்டுக்குமேற்படி ராஜிநாமாக்களை அனுப்பிவைக்குமாறு, கர்நாடக மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

ராஜிநாமா செய்திருப்போரின் விவரம்: எஸ். நிஜலிங்கப்பா (அ. நி. சபை உறுப்பினர்), கே. ஆர். காந்தா, பி. அனந்தாச்சார் (சென்னை எம்.எல்.ஏ. க்கள்); கே. எப். பட்டியல், எஸ். ஆர். காந்தி, வி. டி. ஜட்டி (பம்பாய் சர்க்கார் பார்லிமென்டரி காரியதரிசிகள்), சி. ஜே. அம்பிளி, ஏ. ஜே. தாட்மெட்டி, எம். எச். ஷா, எஸ். பி. கொராங்கர், டி. ஆர். நெஸ்வி, வி. வி. பட்டியல் (பம்பாய் எம். எல்.ஏ.க்கள்)

கர்நாடக மாகாணத்தை நிறுவாமல் விட்டுவிட்டதால், கன்னடியரின் அன்றாட வாழ்க்கை, அவலம் நிறைந்ததாகிவிட்டது; காங்கிரசின் மாட்டும் அவர்கள் நம்பிக்கையிழந்து வருகிறார்கள். என்று கர்நாடக மாகாண காங்கிரசாரின் தீர்மானம் கூறுகிறது.

பொதுவாக மைசூர் மக்கள், சிறப்பாக சமஸ்தானத்தைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் இந் நிலையில் வாளாயிராது, தியாகங்கள் பலபுரிய முன்வரவேண்டுமென்றும், கர்நாடக மாகாணம் விரைவில் நிறுவனமாக வேண்டியதற்கான வழிமுறைகளில் ஒத்துழைக்கவேண்டுமென்றும் தீர்மானம் கேட்டுக்கொள்கிறது.

சென்னை நகர என். ஜி. ஓ. மாநாடு

சென்னை நகர, கெஜட் பதவிலலாத உத்தியோகஸ்தர்களின் மாநாடு ஒன்று, டிசம்பர் 24-ம் தேதி நடைபெறும். சென்னை பிரதமர் [illegible] ஆரம்பித்துவைப்பார்.

இஸ்ரேலுக்கு ஆப்கன் யூதர்கள் குடியேற்றம்?

பாலஸ்தீன், டிச. 5—

சுமார் 250 ஆப்கன் யூதர் குடும்பங்கள், இஸ்ரேலில் குடியேற போகிறதாக என்ற கேள்விக்குப் பாகிஸ்தானிலுள்ள ஆப்கன் ஸ்தானிகர் சர்தார் ஏ மெய கோலாம்கான் பதிலளிக்கையில், இந்தக் குடும்பங்களிலிருந்து குடியேற அனுமதிக் கோரிக்கை வந்திருக்கிறதென்றும், ஆனால், இது விஷயமாக ஆப்கன் சர்க்கார் இன்னும் எவ்வித முடிவும் செய்யவில்லை என்றும் கூறினர்.

பாதரசத்தை தங்கமாக்கலாம்!

நியூயார்க், டிச. 5—

நியூட்டிரான்கள் மூலம் பாதரசத்தை பதப்படுத்தினால், பாதரசத்தையே தங்கமாக்க முடியும் என்று, சிகாகோவில் ஆர்கோன் லெபரிடரியைச் சேர்ந்த டாக்டர் டெம்ஸ்டர் என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.

இது சுலபமான முறையல்லவென்றும், மார்க்கெட்டில் விற்கும் தங்கத்தின் விலையைவிட பன்மடங்கு இதற்கு செலவாகிறதென்றும் கூறப்படுகிறது.

ரசவாதிகள் இதை செய்து முடிக்க நீண்ட காலமாக ஆராய்ச்சி செய்துவந்தும் பலனில்லை. கடைசியில் இப்பொழுதுதான், இது சாத்தியம் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. —ருனோப்

'பூனைகளைக் கொல்லாதே'

லண்டன், டிச. 5—

சொந்தக்காரர்கள் யாருமின்றி திரியும் பூனைகளைக் கண்டதும், சுட்டுத் தள்ளும்படி பிரெஞ்சு அதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதை பிரிட்டிஷ் பூனை பிரியர்களும், பிராணிகளின் பாதுகாப்புச் சங்கங்களும் கண்டித்திருக்கின்றன. —ருனோப்.

திறமையின்மை, ஊழல்களைத்தடுக்க ஏற்பாடு

ஹங்கேரிக்கு ரஷ்ய கண்ட்ரோல் கமிஷன்

புடாபெஸ்ட், டிச. 5—

ஹங்கேரியில் சர்க்கார் நடவடிக்கைகளைக் கண்காணிக்க சர்வ அதிகாரமும் உள்ள ஒரு கண்ட்ரோல் கமிஷனை ரஷ்யா ஏற்படுத்திபிருக்கிறது.

இதில் முழு நம்பிக்கையுள்ள கம்யூனிஸ்டுகளே உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இது எல்லா சர்க்கார் இலாக்காக்கள், சர்க்கார் நடத்தும் ஸ்தாபனங்கள் இவை மீது அதிக ரத்தைச் செலுத்தும். மந்திரி காரியாலயங்களிலும் இவை திடீர் சோதனை போடுமாம்.

திறமையின்மை, ஊழல், பொய்ப்பிரசாரம் இவைகளைத் தடுப்பதற்காகவே இக்கமிஷனை ரஷ்யா ஏற்படுத்தியிருக்கிறதாம். —ருனோப்

புது உலகத் தொழிற் சங்க ஸ்தாபனம்

லண்டன், டிச. 5—

புது உலகத் தொழிற்சங்க ஸ்தாபனத்தில் நிர்வாக போர்டில் இந்தியாவுக்கு ஒரு ஸ்தானம் அளிக்க ஆசியபெடரேஷன் ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய கிழக்குநாடுகளுக்கு ஒரு ஸ்தானமும் கிழக்கோடி நாடுகளுக்கு ஒரு ஸ்தானமும் இந்த போர்டில் ஒதுக்கப்படும் என்று தெரிகிறது

டாஸ்மானியாவில் 'நியூஸ் பிரிண்ட்' உற்பத்தி

லண்டன், டிச. 5—

தென் டாஸ்மானியாவில் நியூஸ் பிரிண்ட் உற்பத்தி மில்கள் இருப்பது தெரிவவந்திருக்கிறது 'ஹாரட்வட்' என்ற மரத்திலிருந்து நியூஸ் பிரிண்ட் தயாரிக்கும் மில் உலகிலேயே தென் டாஸ்மானியாவில் தான் இருக்கிறதாம். —ருனோப்

மாலை மணி

சென்னை 6—12—49 செவ்வாய்க்கிழமை

மூன்றாவது இடம்!

"தோலைக் கடித்துத், துருத்தியைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிப்பது" போல, இந்திமொழி மெல்ல மெல்ல நுழைந்து, இன்று தமிழகத்தையே தன் முழு வலிவுகொண்டு அரிக்கத் தொடங்கிவிட்டது.

இந்தியை, முதலிலே, பிரசார சபை மூலம் பிரசாரம் செய்யத் தொடங்கி, பிறகு தனிப்பள்ளிகள் வைத்துப் போதித்து, பின்னர், அரசாங்கத்தின் ஆதரவு பெற்று, ஆச்சாரியார் மந்திரிசபைக் காலத்திலே நூறு பள்ளிகளில் விருப்பப்பாடமாக இடம் பெற்று, 'சுயராஜ்ய ஆளவந்தார்கள்' காலத்தில் விருப்பப்பாடம் என்ற பெயரில்-ஆனால் மறைமுகமாக எல்லா நடுத்தர வகுப்புப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக விளங்கி, இப்பொழுது நேரிடையாகக் கட்டாயப் பாடமாகப் புகுந்து கொலு விற்றிருக்க ஆரம்பித்திருக்கிறது.

"இனிப் பள்ளிகளில் முதல் பாரத்திலிருந்து நான்காவது பாரம் வரையில், இந்தி, கட்டாய மொழியாகப் போதிக்கப்படவேண்டும்" என்ற ஆலோசனையை, நடுத்தரக் கல்வியைச் சீர்திருத்தி அமைப்பதற்கென்று அமைக்கப்பட்ட திறமையாளர் குழு, அரசாங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளது.

தமிழகத்திற்கும், மற்ற திராவிடக் குழுமொழிப்பகுதிகளுக்கும் வேண்டாத-தேவையில்லாத-பயன்படாத-நன்மை தராத-தீமையே பயக்கும்இந்தி மொழியை, இந்தி ஏகாதிபத்ய ஆளவந்தார்கள், நாட்டின் பொது மொழியாகவும், ஆட்சி மொழியாகவும்ஆக்கிவிட்டனர். "விளக்க மாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டினாற்போல்" என்ற பழமொழிக்கிணங்க, இந்திக்கு அரசியல் மொழி என்ற பட்டஞ்சூட்டி விட்டனர். இந்தி மொழி வெறியாளர்கள் இது. வானொலியிலிருந்து புகை வண்டி நிலையப் பெயர்ப் பலகை வரையில் முதலிடம் பெற்றுவிட்டது. தமிழர்களில்-திராவிடர்களில் மொழியுணர்ச்சி அற்ற சதைப்பிண்டங்களாகவே வாழ்வோர், இன்னமும் எண்ணற்றவர்களாக இருக்கும் காரணத்தால்தான், இந்திமொழி 'குதிரை சவாரி' செய்ய முடிகிறது!

இந்நாட்டிலுள்ள ஆதிக்க வகுப்பினர், தங்கள் ஆசைமொழியாகிய சமஸ்கிருதத்தையும், அதன் வழிப்பிறந்த இந்தியையும் எப்படியேனும் நாட்டில் பரவச்செய்ய அரும்பாடுபடுகின்றனர். அவற்றின் பெருமையை விரித்துரைக்கின்றனர்; அவற்றைப்பாடத் திட்டமாகக் கொண்டுவரக் கூக்குரலெழுப்புகின்றனர். அவை பொருட்டுத் தூது செல்கின்றனர்; ஆட்சியாளர்களுக்குத் தூண்டுகோல் போடுகின்றனர், ஆதிக்க வகுப்பினரின் ஆசைக்கேற்ப அரசாங்கக் கல்வித் திட்டமும், "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" உருவெடுத்து வருகின்றது. இத்தகைய அழிவு வேலைத்திட்டங்கள், திராவிடத்தில்—தமிழகத்தில் நடைபெறுவதற்குக் காரணம் 'திராவிடன்-தமிழன் மீளா உறக்கத்தில் உணர்ச்சியற்றுக் கிடப்பதுதான்' என்று தன் மானத்தை உணர அவன் தலைப்படுகிறானோ, அன்றுதான் அவன் நாடு, மொழி, கலை, பண்பு, நாகரிகம் எல்லாம் சீர்பெற்று, சிறந்து விளங்கி வாழ்வின்பம் தரும்.

இளம் மாணவர்களுக்கென்று வகுக்கும் பாடத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை, இன்றைய ஆளவந்தார்கள் ஆட்சியில் இருப்பதைப் போல என்றும் இருந்திருக்காது! அவ்வளவு உச்சநிலை அடைந்துள்ளது! ஆண்டுக்கொருமுறை, சில நேரங்களிலே திங்களுக்கொருமுறை பாடத் திட்டத்தை மாற்றிக் கொண்டே இருக்கும் பண்பு இன்றைய ஆட்சியாளரிடத்துச் 'சிறந்து' விளங்குகிறது!

ஆதிக்க வகுப்பாரின் கூக்குரலுக்கு அஞ்சி, செத்தசமஸ்கிருத மொழிக்குப் பாடத் திட்டத்தில் இடம் ஒதுக்க, பிரதேச மொழியைக் கொலை செய்ய முனைந்துள்ளனர். அதாவது, இரண்டாவது பாரத்திலிருந்து ஆறாவது பாரம் வரையில் பிரதேச மொழிக்குப் பதிலாக, சமஸ்கிருதமொழியை எடுத்துப் படிக்கலாம் என்ற திட்டத்தைத் திறமையாளர் குழு வகுத்திருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் வைத்துப் பார்த்தால், இரண்டாவது பாரத்திலிருந்து ஆறாம் பாரம் வரையில் தமிழை எடுத்துப் பயிலலாம்; இல்லையாயின் சமஸ்கிருதத்தை எடுத்துப் பயிலலாம்; தமிழையே பயில வேண்டும் என்ற அவசியமில்லை. நாட்டுமொழி புறக்கணிக்கப்பட்டு, அதன் இடத்தில் செத்தமொழி வைக்கப்படுகிறது! அதே சமயத்தில் இந்தியைக் கட்டாயப் பாடமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்! இந்திக்குக் கொடுக்கும் அளவு அவசியமும், இடமும் இனிப் பள்ளிகளில் தாய்மொழி—நாட்டு மொழியாகிய தமிழுக்குக் கிடையாது! செத்த சமஸ்கிருதத்திற்குத் தமிழுக்குக் கொடுக்கும்அளவு உரிமை கொடுக்கப்படுகிறது! சமஸ்கிருதத்தையும், இந்தியையும் நிரம்பப் படித்துக் கொண்டு, மிக மிகக் குறைந்த அளவு தமிழைக் கற்றுக் கொண்டு தமிழகத்தில் உலவ, சிலருக்கு இடமேற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது ஆதிக்க வகுப்பினரால், ஆட்டிப் படைக்கும் அரசாங்கத்தால்!

புகைவண்டி நிலையத்திலுள்ள பெயர்ப் பலகைகளில் இந்திக்கு முதலிடமும், தமிழுக்கு மூன்றாவது இடமும் அளிக்கப்பட்டிருப்பது போலவே, பள்ளிக்கூடப்பாடத் திட்டங்களிலும் சரி, அன்றாட அரசியல் வாழ்விலும் சரி தமிழ் மூன்றாவது இடத்துக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது. வெள்ளையன் ஆட்சிக் காலத்திலாவது, தமிழுக்கு இரண்டாவது இடம் அளிக்கப்பட்டது, இப்பொழுதுள்ள "சுயராஜ்ய" ஆட்சியிலே, **மூன்றாவது இடம் தான்**!

புகைவண்டிநிலையப்பெயர்ப் பலகையில், மிகப் பலர்க்குப் பயன்படும் **தமிழுக்கு** மூன்றாவது இடம்; அதைவிடச் சிறிதளவு குறைந்தவர்களுக்குப் பயன் படும் **ஆங்கிலத்திற்கு** இரண்டாவது இடம்; மிகமிகக் குறைந்தவர்களுக்குப் பயன் படும் **இந்திக்கு** முதலிடம்! எப்படி இருக்கிறது, திராவிடத்தின் ஆட்சியாளரின் ஆளுந்திறம்!

புகைவண்டிநிலையப்பெயர்ப் பலகை மட்டிலுமல்ல, இந்திய ஆட்சி அமைப்பிலேயே தமிழன்-திராவிடன் மூன்றாவது இடம்தான் அளிக்கப்பட்டிருக்கிறான். தமிழனின்-திராவிடனின் வாழ்வு முதலிடம் பெற வேண்டுமானால், திராவிடம் திராவிடர்க்குரித்தான தனியாட்சி பெற்றால்தான்இயலும்! அந்த நிலையில் தமிழன் தாய்மொழியாகிய தமிழையும், அகில உலக மொழியாகிய ஆங்கிலத்தையும் மட்டுமே கொண்டிருந்தால் போதும். பிறமொழி ஏதும் தேவையில்லை!

அறிவுக் கதிர்!

ஆரியப் பார்ப்பனர் தமக்குரியதாகக் கருதிப் பெருமை பாராட்டிக் கொள்ளும் ஆரிய மொழி பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே, உலக வழக்கில் இன்றி இறந்து ஒழிந்தமை கண்டு, அதனைத் திரும்ப உயிர்ப்பிக்க எவ்வளவோ முயன்று பார்த்தும் அது முடியாமையின் மெல்ல மெல்லச் சமஸ்கிருத மொழிச் சொற்களைத் தமிழிலும், தமிழோடு இனமாகிய மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலாகிய மொழிகளிலும் நுழைத்து, அவ்வாற்றால் அம்மொழிகளின் தனிச்சுவையினையும் ஆற்றலினையுங் கெடுத்து அவற்றை வடமொழியுருவாக்கப்பெரிதும் முயன்று, அம்முயற்சியில் அரை வாசிக்கு மேல் தேர்ந்து விட்டார்கள். தமிழ் மக்களைத் தவிர, மலையாளத்தாரும், தெலுங்கரும், கன்னடரும் எளிதிலே ஏமாறிவிட்டார்களாதலால் ஆரியப் பார்ப்பனர் அம்மொழிகளை முக்கால் வாசி வடமொழியுருவாக்கிவிட்டார்கள்.

அவர்களின் கரவையும், சூழ்ச்சியையும் அறியாத தமிழ்ப்புலவர் சிலர் அவர்தம் வலையிற் சிக்கிக் கொண்டு, தமிழைத் தனித்து வழங்கல் இயலாதென்றும், ஏராளமான வடசொற்களை அதன் கட்சேர்த்து வழங்கலே அதனை வளம்படுத்துவதாகுமென்றும் பொருந்தாவுரை கூறித் தனித் தமிழ் வளத்தைக் கெடுக்கப்பார்க்கிறார்கள்.

—மறைமலையடிகள்

அறிவைத் துணைக்கொண்டு ஆட்சி செய்க

ஐ. நா. சபைக்கு அக்கரை இல்லையா?

ஐ. நா. வுக்கு அறிவுறுத்தலும், தென்னாப்பிரிக்காவுக்கு அச்சுறுத்தலும் தருகிறது 'நியூயார்க் டைம்ஸ்'

"தென்னாப்பிரிக்க சர்க்காரின் கொள்கைகளை மேற்கத்திய உலகம் மேலும் அதிக சிரமத்தோடு கவனிக்க வேண்டும்"

"விஷயம் முற்றி, அனர்த்தம் விளையுமுன் தென்னாப்பிரிக்க சர்க்கார் தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்"

என்று, அண்மையில் "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது. தென்னாப்பிரிக்க இந்தியரின் அல்லல்களுக்கு தென்னாப்பிரிக்க ஆட்சியாளர் மட்டுமே காரணம் என்று சொல்லுவதற்கில்லை. எல்லா நாடுகளுக்கும் நீதி வழங்குவதற்கென தோன்றியுள்ள ஐ. நா. சபை, சரிவரத் தனது கடமையைச் செய்திருக்குமானால், தென்னாப்பிரிக்காவில் இன்றைய தினம் நடப்பது போன்ற காட்டு ராஜா தர்பார் நடைபெறவே இடமேற்பட்டிராது.

தென்னாப்பிரிக்க அரசியலாரின் திமிரை ஒடுக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஐ. நா. சபைக்குக் கிட்டியும், அவற்றை அச் சபை தட்டிக் கழித்து விட்டது. முன்னர், ஜெனரல் ஸ்மட்ஸ் ஆட்சியின் போதே, ஐ. நா. அளித்த தீர்ப்பை அலட்சியப்படுத்திவிட்டது, ஸ்மட்ஸ் சர்க்கார். அப்படியிருந்தும் ஐ. நா. அவ்வாட்சியாளர் மீது எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அடுத்துத் தோழர் மலான் ஆட்சியிலும் அதே நிலைத்திருக்கிறது ஐ. நா. சபையைத் துரும்பென மதித்து நடக்கிறார் தோழர் மலான். அப்படிப்பட்டவரையும் கண்டிக்கும் தைரியம் ஐ. நா. சபைக்கு இல்லையாயின், அச்சபை இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன.

எனவேதான், மேற்கத்திய உலகம் தென்னாப்பிரிக்க இந்தியப் பிரச்னையின் பேரிலும் கவனம் செலுத்த வேண்டுமென வற்புறுத்துகிறது. "நியூயார்க் டைம்ஸ்" அதே சமயத்தில் "தென்னாப்பிரிக்க சர்க்கார் தனது கொள்கைகளை மாற்றிக் கொள்ளாவிட்டால், விஷயம் முற்றி விபரீதம்விளையும்" என்று தென்னாப்பிரிக்க ஆட்சியாளரையும் அச்சுறுத்துகிறது.

இவ்வாறு ஐ. நா. வுக்கு அறிவுரையும், தென்னாப்பிரிக்காவுக்கு அச்சுறுத்தலும் தரும் 'நியூயார்க் டைம்ஸின்' நேர்மை பாராட்டத்தக்கது.

25 பவுனுக்கு ஒரு விமானம்

லண்டன், டிச. 5—

உபயோகிக்கப்பட்ட இரண்டாந்தர விமானங்கள், 25 பவுனுக்கு, பிரிட்டனில் வாங்க முடியும். ஆனால் இவை பறக்கத் தகுதியானவை தான் என்று சர்டிபிகேட் பெறுவதற்கு முன் 'ஓவர் ஹாலில்' செய்யப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன.

இதுவரை சப்ளை இலாகா காரியாலயம் 4000 விமானங்களை விற்றிருக்கின்றனவாம். —ஏனோப்

பழைமைப் . . .

— [1-ம் பக்கத் தொடர்ச்சி] —

பணமூட்டைகளும், கொள்ளைலாப முதலைகளும் சீராட்டி வளர்க்குமொரு ஸ்தாபனம் மக்கள் நலத்துக்கு — முன்னேற்றத்துக்குப் பாடுபடுமென்று எதிர்பார்ப்பது எங்ஙனம்? முதலாளிகள் சுகபோக வாழ்வுக்கென்று அவதரித்த ஸ்தாபனம் ஏழையரை ரட்சிப்பது எப்படி? இத்தன்மைதான் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது லண்டன் மாநாட்டில்.

அரசியலமைப்பு சபையில் அன்று அம்பேத்கார் எடுத்துரைத்த கருத்தினையே தோழியர் மணிபென்காராவும் உலகத் தொழிலாளர் மாநாட்டில்வகையுடன் கூறியுள்ளார். இந்தியா இன்னும் சமுதாய விடுதலையை எய்தப் பெறவே இல்லை; சமுதாய விடுதலை தொலை தூரத்திலேயே நிற்கிறது. பொருளாதாரநிலையும் நாளுக்கு நாள் சிதைந்து சீரழிந்து வருகிற தென்பதாகச் செற்றெனக் காட்டியுள்ளார். வர்ணாஸ்ரமவக்கிரங்கள் மனங் கோணுகவகையிலான சமுதாயத் திட்டமும், பணப் பெட்டிகள் பதைப்பும் திகைப்புமுறாத வகையிலான பொருளாதாரத் திட்டமும் வகுக்கவே உரிமையும் யோக்கியதையும் உண்டு இன்றைய முதலாளித்வ ஆட்சியினருக்கு! மக்களின் பனிக-தர்ம வாழ்வுக்கான வகையான திட்டம் தீட்டவும், உருப்படியான செயலாற்றவும் ஒருக்காலும் இயலாதவர்களால். அப்படிச் செய்வதற்கான மனோபாவத்துக்கு வளைந்து கொடுக்கின்றனரென்பதற்கு ஓரிரண்டு அறிகுறிகள் தென்பட்டாலும் போதும், மடக்கி வீழ்த்திவிடும் முதலாளித்வக் கும்பல்!

ஸ்ட்ரைக்குகளும் கதவடைப்புகளும்

சர்வதேசத் தொழில் ஸ்தாபனம் தரும் தகவல்

சர்வதேசத் தொழில்ஸ்தாபனம் (ஐ. எல். ஓ) உலகமெங்கும் கணக்கெடுத்தலை பரிசீலித்து, போர்க்காலத்திலிருந்து வேலைநிறுத்தங்களாலும் கதவடைப்புகளாலும் வீணான நேரம் அதிகரித்து வந்திருக்கிறதென்றும், ஆனால் பொதுவாக இருந்து வரும் கோஷ்டிவாதத் திண்டாட்டத்தைப் பார்க்கும்போது இவை அவ்வளவு குறிப்பிடத்தக்கவையல்ல வென்றும் அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் தொழில் தகராறுகள் காரணமாக 1940-ல் ஆயிரம் பேருக்கு வீணான நாட்கள் 337-ல் இருந்தது 1945-47-ல் 601-ஆகி விட்டதென்றும் கணக்கிடப்படுகிறது.

செத்த வடமொழிக்கு செல்வாக்குத் தேடுகிறார் தோழர் கட்ஜு

இந்தியைப் பரப்ப வடமொழியே ஏற்றவழியாம்!

அலகாபாத் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பிதற்றல்!

தேசிய சர்க்கார் பாஷை எதுவாக இருப்பினும், இறுதியில், சமஸ்கிருதம் மக்களை ஒன்று கூட்டி வாழவைக்கும் சிறந்த பாஷையாக விளங்குமென, எனக்கு சமீபத்தில் இந்தி பேசப்படாதிருக்கும் பிரதேசங்களில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு, அடிக்கடி அபிப்பிராயம் வெளியிட்டுள்ளேன். இது வியக்கத் தக்கதாயிருக்கலாம். ஆனால் இந்தியாவெங்கும் இந்தியைப் பரப்ப சமஸ்கிருதம் ஒன்றே வழி. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் சர்வகலாசாலைகளிலும், இருக்கும் பாடத் திட்டத்தில், தனக்குள்ள கௌரவ ஸ்தானத்தை அது சீக்கிரமே பெற்று விடும் என நான் நம்புகிறேன்.

என்று மேற்கு வங்க கவர்னர் தோழர் கட்ஜு அலகாபாத் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். தோழர் கட்ஜு இன்னும் வடமொழிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுவது, இதுவே முதல் தடவையென்று சொல்வதற்கில்லை. முன்னொரு முறையும் இதே கருத்தை வெளியிட்டிருக்கிறார். எனவே, இது பற்றி அதிகமாகக் கவலை கொள்ளாவிடினும், இத்தகைய பேச்சுக்கள், குழம்புத்தனமானவை என்பதைச் சுட்டிக் காட்டவே இதுபற்றி ஒரு சில சொல்லவேண்டியவர்களாகிறோம்.

இந்தியைப் பரப்ப சமஸ்கிருதம் ஒன்றே வழியென்று சொல்லும் அவர், தமது பேச்சுக்கும் பீடிகை போடும் முறையில் "இது வியக்கத் தக்கதாய் இருக்கலாம்" என்று ஆரம்பிக்கிறார். இது வியக்கத் தக்கது மட்டுமல்ல, நகைக்கத் தக்கதுமாகும் என்கிறோம் நாம். ஏனெனில், இந்தியாவில் குறிப்பிட்ட ஒரு பகுதியில், அதாவது வடநாட்டில், அல்லது ஆரியவர்த்தத்தில் இந்தியோ, சமஸ்கிருதமோ ஆக்கம் பெற இயலுமே யன்றி, தென்னாட்டில் அவை தலையெடுக்கவே முடியாது என்பது உறுதி.

சமஸ்கிருதம் மக்களை ஒன்றுபடச் செய்யும் சக்தி வாய்ந்ததாம். ஆகா! என்ன அருமையான கருத்து! உலகத்திலேயே மக்களினத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து வைக்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு மொழி இருக்கிறதென்றால், அது வடமொழியேயாகும். வருணாசிரமத்தையும், அதனடியாகப் பிறந்த பல்லாயிரக் கணக்கான சாதி வேற்றுமைகளையும் உற்பத்தி செய்ய வழிகோலிய மொழி, வடமொழி என்பது உலகறிந்த உண்மை.

இக்காரணம் பற்றியே வடமொழியையும், அதன் வழிவந்த இந்தி மொழியையும் தென்னாட்டவர் வெறுக்கின்றனர். இந்நிலையில் தான், இந்தி மொழி பரவ, சமஸ்கிருதமே ஏற்ற வழி என்கிறார். எனவே தான் இவரது பேச்சு, குழம்புத்தனமானது என்கிறோம். நடக்க முடியாத காரியத்தை நடக்கக் கூடியதாக நினைக்கிறார். இவரது இத்தகைய நினைப்புக்குக் காரணம், ஒன்று அறியாமை, அல்லது அகம்பாவமாக இருக்க வேண்டுமேயல்லாது, அறிவுடைமையாக இருக்க இடமில்லை.

வடமொழி இறந்துபட்ட மொழி, பேச்சு வழக்கு அழிந்து ஒழிந்து சிதைந்துபோன மொழி. அப்படிப்பட்ட மொழியின் துணைகொண்டு, இந்தி இந்நாட்டில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நினைப்பது பேதமை.

தோழர் கட்ஜு போன்றவர்கள் கவனிக்கவேண்டிய எத்தனையோ நல்ல பணிகள் இருக்க, குழிப்பிள்ளையைத் தோண்டியெடுத்துக் கொண்டு மாரடிப்பது போன்று, செத்த வடமொழிக்குச் செல்வாக்குத் தேடும் பயனற்ற பணியில், அடிக்கடி ஈடுபடுவது கண்டு, இவர்பால் பரிதாபங்கொள்வதைத் தவிர, வேறென்ன செய்வதென்றே நமக்குப் புரியவில்லை.

தோழர் கட்ஜுவாயினும் சரி, வேறு யாராயினும் சரி எவ்வளவு பாடுபட்டாலும் வடமொழிக்கு வாழ்வளிக்க முடியாது. வேண்டுமானால், அப்படிப்பட்ட ஒரு முயற்சியில் ஈடுபட்டுப் பார்க்கட்டும் அவரும் அவரது தோழர்களும். தோழர் கட்ஜுவின் பேச்சைக் கேட்டு வடமொழி வந்திடுமே என்ற அச்சமோ, கவலையோ நமக்கில்லை. பின்னர் ஏன் இவரது பேச்சுக்கும் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறோமெனில், அது அறியாமையின் பாற்பட்ட ஆணவப் பேச்சு என்பதை விளக்கவே யாகும்.

பூமிக்குள் உள்ள வெப்பம்

வெளிப்படுத்தி உபயோகிக்க வழி

லண்டன், டிச. 5—

பூமிக்குள் உள்ள வெப்பத்தை செயற்கைக் குழாய்கள் மூலம் கொண்டுவந்து, வீடுகளில் கதகதப்பாக பயன்படுத்த முடியும் என்பது, ஆராய்ச்சிமூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அதிகசெலவாகிறது என்று கருதப்பட்டது; ஆனால், இதை மலிவான செலவில் செய்யமுடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள்.

வாலாஜா தாலுகா வன்னிய மாநாடு

வாலாஜாபேட்டை, நவ. 28—

27-11-49 காலை 8 மணிக்கு சில முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் நடைபெற்றது. மாநாடு வாலாஜாபேட்டை நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் காலை 9-மணிக்குத் துவங்கியது. வரவேற்புக்குழுச் செயலாளர் தோழர் சி. அ. வரதராஜன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசி, தோழியர் பத்மாவதி அம்மாளைக் கொடி ஏற்றும்படி கேட்டுக்கொண்டார். தோழியர் பத்மாவதி அம்மாள் கொடியின் தத்துவத்தை விளக்கமாகக் கூறி கொடியை உயர்த்தினர்.

பிறகு, தஞ்சைமாவட்டக் கழக உறுப்பினர் இடங்கல் தோழர் சம்பந்தம் பி. ஏ. அவர்கள், மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசினர். பிறகு மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் சோ. லோ நாதனார் தனது வரவேற்பு உரையை நிகழ்த்திவிட்டு, தோழர் எம். ஏ. மாணிக்கவேல்நாயகரை தலைமை தாங்கும்படி கேட்டுக் கொண்டார். தலைவர் முன்னுரைக்குப்பின், உடையார்பாளையம் வேலாயுதம் படத்தை கடலூர் தோழர் ர. சேவித்தசாமி திறந்து வைத்தார்.

பிறகு தோழர்கள் கடலூர் திருக்குறள் முனிசாமி; சென்னை "பல்லவநாடு" ஆசிரியர் வ. ஜெயசந்திரன், கே. விநாயகம், எம். ஏ. எல். டி., வேலூர் சி. யோகசுந்தரம், எம். ஏ.எல்.டி ஏ.எஸ். அருணாசலம் வித்வான் வேணுகோபால் மற்றும் சிலரும் சமூகமுன்னேற்றத்தைக் குறித்துப் பேசினார்கள்.

தீர்மானங்கள்:—

1. வடவேங்கடம் முதல்தென் குமரிவரை தமிழ்நாட்டைச் சார்ந்த தென்பகுதிக்குப் பல காரணங்கள் இருப்பதால் டை பகுதி தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்பதை இம் மாநாடு அரசாங்கத்திற்கு அறிவிக்கிறது.

2. உடையார் பாளையம் வேலாயுதம் கொலைவழக்கை மீண்டும் அபீல்செய்ய சென்னை சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. நமது சமூக சங்கங்கள் இல்லாத கிராமங்களில் உடனடியாக சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென, இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

டை தீர்மானங்கள் நிறைவேறிய பின், செயலாளர் சி. அ. வரதராசன் நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது. (ஓ-நி)

ஏஜண்டுகள் தேவை

கீழ்க் கண்ட இடங்களுக்கு நமது 'மாலை மணி'யை விற்பனை செய்ய, முன்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

1 கடயநல்லூர்
2 உதகை
3 ராசிபுரம்
4 துவரங்குறிச்சி
5 அம்பாசமுத்திரம்
6 ஆலந்தூர் (இராமநாதபுரம் ஜில்லா)
7 பாப்பா நாடு
8 சென்னிமலை

மானேஜர்
"மாலை மணி" சென்னை

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

திமிரி

திமிரி, டிச. 1—

29—11—49-ல் நடைபெற்ற திமிரி திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழாவில் தோழர் கி. பி. சிற்றரசு பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:

தோழர்களே! காங்கிரஸ் கோட்டையாகக் காணப்பட்ட இந்த திமிரி, இன்று, இப்போது திராவிட முன்னேற்றக் கழகக் கற்கோட்டையாகக் காண பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். எங்கள் முன்னேற்றக் கழகம், வைதிகர்களைத் தாக்கிப் பேசி, மகிழ்ச்சி யடைவதற்காக ஆரம்பிக்கப்பட்டதல்ல—நம்முடைய மக்கள், இன்று பொருளாதாரத் துறையில், சமுதாயத் துறையில், அரசியல் துறையில் தாழ்ந்து கிடக்கின்றனரே! இதனை மீட்க, நம் மக்களுக்கு பகுத்தறிவை ஊட்ட எண்ணியே, ஆரம்பிக்கப்பட்ட மகத்தான ஸ்தாபனமாகும்.

ஒருபோது நாங்கள் திராவிட கழகத்தில் இருந்து பணியாற்றினோம். இன்று அங்கே, இலட்சியவாதிகளுக்கு இடமில்லை, என்பதை உணர்ந்தோம். உடனே வெளியேறினோம். லட்சியவாதிகளைக்கொண்டு ஒரு புதுக் கழகம் கண்டோம். இன்று பணி புரிகிறோம். நம்நாட்டு மக்கள் கல்வித் துறையில் ஓரளவேனும் முன்னேற வசதி செய்து, ஆட்சியாளரை அதிக கவனம் செலுத்துமாறு கேட்டு, வாலிபர்கள் யாவரும் சோர்வின்றி உழைக்க வேண்டுமென கூறி முடித்தார்.

அடுத்துத் தோழர் மணிமொழியன் பேசுகையில் கூறியதாவது:

தோழர்களே! இவ்வூரில் மறுமலர்ச்சி தோன்றிற்று. அதன் விளைவாகவே திராவிட இன உணர்ச்சி எழுந்தது. பின்னர், இந்த ஊர் வாலிபத் தோழர்கள் ஒரு காலத்தில் காங்கிரஸ் தொண்டர்களாக இருந்தவர்கள், அந்தத் தொண்டர்களாலேயே, அந்த இயக்கம் வெறுக்கப்பட்டு, மறக்கப்பட்டு, கிடப்பட்டது என்றால், இன்று காங்கிரஸ் ஸ்தாபனம் எவ்வளவு வலிமை குன்றிவிட்டது என்பதே அதின் பலம் எனக் கூறி முடித்தார்.

தோழர் ம. தேவன் முதலில் நாட்டு வணக்கம் பாடினார். இறுதியில் தோழர் ஈஸ்வரன் நன்றிகூற 9-30 மணிக்கு முடிந்தது.

திருவாரூர்

திருவாரூர், நவ. 30—

திருவாரூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் 20-11-49 ஞாயிறு மாலை 6-மணிக்கு விசயபுரம் எல்லையம்மன் தெருவில் நிகழ்வுற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகிக்கவிருந்த மங்க நல்லூர் தோழர் வை. மாணிக்கம் வர இயலாமையால், திருவாரூர் தி. மு. க. செயலாளர் டாக்டர் வி யாகவன் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தித்தரு மாறு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் இரா தென்னன் கேட்டுக்கொண்டார். துணைச்செயலாளர் தோழர் ச. ஜேசுதாஸ் வழிமொழி, தோழர் விசயராகவன் தலைமை தாங்கினார். முதலில் தோழர் கே. கோவிந்தசாமி திராவிட நாட்டுப்பண் பாடினார்.

தலைவர் தன் சொற்பொழிவில் திராவிட மாணவர்கள், திராவிட மாணவர் கழகத்திலிருந்து விலகி, திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைக்க வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டார். பின்னர், தோழர் காஞ்சி கலியாண சுந்தரம் அவர்கள், அரசியல் பற்றி சுமார் ஒரு மணி சொற்பொழிவு ஆற்றினார். அதன் பின்னர், தோழர் இரெ. இளம் வழுதி புதிய அரசியலில் திராவிட நாட்டின் நிலைமையைப் பற்றியும், நேருவின் அமெரிக்கப் பிரயாணத்தைப் பற்றியும், காமராஜரின் கண்ணியமற்ற செயலைப் பற்றியும்; திராவிட மாணவர் முன்னேற்றத்துக்கு, அறிவுரை தந்தும் சுமார் 1-30 மணிநேரம் சொற்பெருக்காற்றினார். கடைசியாக, தி. மா. மு. க. துணைச் செயலாளர் தோழர் ச. ஜேசுதாஸ், இக்கூட்டத்திற்கு பொருளுதவிய உள்ளூர் வெளியூர் தோழர்களுக்கும், ஒலிபெருக்கி அமைத்து உதவிய தோழர் ஜி. இராமநாதனார் அவர்களுக்கும், இவ்விழா சிறப்புற நடைபெற ஆவன செய்த கருணை-ஜமால், பாலையூர் இளங்கோ, இரா. கோபாலசாமி, மு. க. முகைதீன் பிச்சை, இரா. உத்திராபதி, டி. பி. திருஞானசம்பந்தம், வை. ச. மணி, கே. கோவிந்தசாமி, வி. திருவேங்கடம் ஆகியோர்களுக்கும், கழக சார்பாக நன்றி நவின்றார். கூட்டம் இரவு 9 மணிக்கு முடிவுற்றது. (வி-[illegible])

ஆசிரியருக்கு முடங்கல்

தேர்வுக்குப் படிக்க புத்தகம இல்லை!

ஐயா,

1950-ம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெற வேண்டிய செகண்டரி கிரேட் பரீட்சைக்கு உரிய தமிழ்ப் பாடப் புத்தகம் இதுவரை அரசாங்க அச்சகத்திலோ, பல்கலைக் கழகக் கட்டிடத்திலோ அச்சிடவில்லை. சுமார் மே மாதத்திலிருந்து பிரதி கிடைக்கவில்லை. காருண்ய சர்க்கார் இதுவரை அதற்கான எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இதில் முக்கியமாய் பாதிப்போர்களான ஹையர் கிரேட் ஆசிரியர்கள், S. S. L. C. பரீட்சை எழுதி, செகண்டரி கிரேட் பரீட்சை எழுதவேண்டியவர்களுக்கு மிக்க இடையூறாய் இருக்கிறது. ஆசிரியர்கள் போதிய அளவு இல்லா இக்காலத்திலே, ஒருவர் இருவர் தோல்வுற்று, பரீட்சைக்குப் போக இன்னலேற்பட்டால் எப்படி ஆசிரிய உலகம் சீர்படும்? என்னமோ ஆசிரியர் நிலை உயரும்? இதுவா, ஆசிரியர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் உதவி?

சென்னை, 4-12-49 } இங்ஙனம், அல்லலுறும் ஆசிரியர்.

முன்வைத்த காலைப் பின்வைக்க மாட்டோம்!

இலட்சியமே பெரிதென இறுதிவரை போராடுவோம்!

அனந்தப்பூரில் வடசென்னைத் தோழர் பி. வி. முத்துசாமி

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே!

அனந்தபூர் தோழர்களால் எனக்களிக்கப்பட்ட இவ்வரவேற்புக்கு வணக்கத்தையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு முன் நடந்த கூட்டங்களில் பார்த்ததை விட, இன்றைய கூட்டத்தில் அதிக ஆர்வத்தையும் உற்சாகத்தையும் கண்டு களிப்படைகின்றேன். இன்ஜினியரிங் கல்லூரித் தோழர்களும், தெலுங்கு, மலையாளம் பேசும் நண்பர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டிருப்பது பெரிதும் மகிழ்ச்சியைத் தருகிறது. திராவிட முன்னேற்றக் கழக இலட்சிய வெற்றிக்கு, இதைவிட வேறு சான்று தேவையில்லை. எனவே, மீண்டும் ஒரு முறை அனைவருக்கும் என் வணக்கம் உரித்தாகுக!

தென்னாட்டு ஐக்கியம் குறித்தும், தி. மு. க. தொண்டு பற்றியும் தோழர்கள் விரிவாகப் பேசினார்கள். மிக்க மகிழ்ச்சி! தென்னாட்டு மக்கள் மொழிவழியாகப் பிரிந்திருக்கின்றார்களே தவிர, இனத்தால் நாம் அனைவரும் ஒரே குடும்ப மக்கள்-திராவிடர் என்பதை எவரும் மறுக்க முடியாது. இது, ஈரோட்டு சரக்கோ, அல்லது தோழர் அண்ணாதுரை சொல்லித் தந்துள்ள ஆரம்ப பாடமோ அல்ல; வரலாறு விளக்கும் உண்மை!

அரசியல் மோடி வித்தை!

கிழக்கில் வங்காள விரிகுடாவுக்கும், வடக்கில் அரேபியாக் கடலுக்கும் இடையே விரிந்து, குமரிமுனையிலிருந்து, விந்திய மலை வரைக்கும் படர்ந்துள்ள பெரிய நிலப்பரப்பைத்தான் நாம், தென்னாடு—திராவிடம் என்றும், அங்கு வாழும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசும் மக்களைத்தான் திராவிடர்—தென்னாட்டு மக்கள் என்றும் நாம் வலியுறுத்திக் கூறிவருகிறோம். ஆனால், ஆளவந்தார்களுக்கும், நம் அரசியல் எதிரிகளுக்கும் நாம் கூறும் திராவிடம், திராவிடர் என்ற வார்த்தைகள் கசப்பாக இருக்கிறது. ஏன்? அவர்களுக்கு விவரம் தெரியாதென்றோ, அவர்கள் சரித்திரம் படிக்காதவர்கள் என்றோ நினைக்காதீர்கள்? அது தவறு!

நம் வீட்டில் ஐந்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் சிறு பையன்கூட, இந்த நாட்டு பூர்வீகக் குடிகள் திராவிடர், அவர்கள் நாடு திராவிடநாடு, இந்நாட்டுக்கு சிந்து நதிக் கரையிலிருந்து குடியேறியவர்கள் ஆரியர்கள், ஆரியர் வருகைக்குப் பின்தான் "ஒன்றே குலமும் ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த கோட்பாடு கொண்டு வாழ்ந்துவந்த திராவிடர் சிதறுண்டு, சீர்குலைந்து போனார்கள், என்று படிப்பதை நாம் பல முறை கேட்டுக் கேட்டு சலித்திருக்கும்போது, நாட்டையாளும் மந்திரிமார்களுக்கும், அரசியல் சூழ்ச்சிக்காரர்களுக்கும் அந்த உண்மை தெரியாத புதிராக இருக்குமானால், அதை இருபதாம் நூற்றாண்டு விநோதம் என்று சொல்லாமல், வேறெப்படி விளக்குவது? ஆகவே, பாமர மக்களை இன்னமும் அறியாமைப் படுகுழியிலேயே ஆழ்த்தி வைக்க, அவர்கள் மேற்கொண்டிருக்கும் அரசியல் மோடி வித்தை இது, என்று கூற நான் ஆசைப்படுகிறேன்.

நலிவோருக்கு நாடாள்வோர் துணையில்லை!

நான் உள்ளபடியே சொல்கிறேன், தென்னாட்டு மக்கள்-அதாவது திராவிடப் பெரு இனம் முன்னேற்றமடைய வேண்டும், என்ற விருப்பமுள்ள ஒவ்வொருவரும், இந்நாளில் திராவிடமுன்னேற்றக் கழகத்தையே நம்பி இருக்க வேண்டியவர்களாகிறார்கள். ஏன்? நலிந்திருக்கும் நம்மைப் பற்றி அக்கறை எடுத்துக் கொண்டு உழைக்க நாட்டிலே நாதியில்லை, காங்கிரசும், இன்றைய சுதந்திர ஆட்சியும் நம்மை நிரந்தர அடிமைகளாக ஆக்க எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளிலிருந்து, ஒருவாறு உணர்ந்துகொள்ளலாம்.

நான் காங்கிரஸ் தோழர்களையே கேட்கிறேன்—நம் நிலை என்ன? நம் நாட்டு நிலை என்ன? சுதந்திர ஆட்சியில் தானாகட்டும் என்ன வாழ்கிறது?—நாட்டு மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

சுயஉரிமையில்லை சுயராஜ்ய மந்திரிக்கு!

குமாரசாமிராஜா நம் மாகாண பிரதம மந்திரி; அவர் ஒரு திராவிடர்; ஆனால், எந்த வகையிலாவது அவர் நமக்கு-நம் நாட்டுக்கு நன்மை தரக்கூடிய செயலை சுயேச்சையாக செய்ய முடிகிறதா? துணிந்து செய்யத்தான் முடியுமா? எதற்கெடுத்தாலும் வடநாட்டுக்குக் காவடி தூக்கிக் கொண்டு போவதும், ஆலோசனைக் கேட்டு வந்து செய்வதும் தானே அவர் முதல் மந்திரி வேலைக்குரிய டைம்டேபிலாக இருந்து வருகிறது. இதுதான் சுதந்திர ஆட்சியா? வீரச்சிதம்பரங்கள், திருப்பூர் குமரன்கள் ஏகாதிபத்திய கோரப் பசிக்கு இரையானது இந்த அடிமை வாழ்வுக்குத் தானா?

நான் கேட்கிறேன் தோழர்களே, நம் திராவிடர் இயக்கத்தைச் சேர்ந்த பலர் எழுதிய அருமையான நூல்கள், நாடகங்கள், ஆராய்ச்சி ஏடுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தடை உத்தரவுகளைத் தங்குதடையின்றிப் பிரயோகித்திருப்பதும், பத்திரிகைகளுக்கு நியாய வரம்பையும் மீறி, ஜாமீன் தொகைகள் கேட்பதும் தான் இன்றைய குமாரசாமி ராஜா ஆட்சியில் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரஜா உரிமைகளா? நேர்மையா இது? ஆளவந்தார்களுக்கு அடுக்குமா இந்த அநியாயம்?

எத்தனை நாட்களுக்கு இந்த வடநாட்டு அடிமைகள, நம் வளமார் திராவிடத்தை அடக்கு முறைகளின் உதவியாலும், தடையுத்தரவுகளின் பாதுகாப்பாலும், ஏகபோக உரிமை கொண்டாடிக் கட்டியாண்டுக் கொண்டிருக்கமுடியும்? பொருத்திருந்து பார்ப்போம்.

மந்திரி பதவி என்ன ராஜபார்ட்டா?

வடநாடு, நம் ஒரு சில சுய உரிமைகளை மட்டும் பறித்துக்கொண்டிருப்பதாக எண்ணிவிடாதீர்கள். பொருளாதாரத் துறையில் நாம என்றுமே தலை தூக்க முடியாதபடி, வடநாடு, அதிகாரம் என்னும் பாராங்கல்லை நம் தலையில் வைத்து அழுத்திக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்காக ஒன்று சொல்லுகிறேன், இந்திய அரசாங்கம் உலக பாங்கியில் இருமுறை கடன் வாங்கி இருக்கிறதல்லவா? அந்தக் கடனில் விகிதாச்சாரப்படியாவது நம் மாகாண புனரமைப்பு வேலைகளுக்கு எவ்வளவு தரப்பட்டது? ஏன் தரப்படவில்லை—அதைத்தான் நீங்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். நம் மாகாணம் கேட்டதற்கு வடநாட்டு மத்திய சர்க்கார் அளித்த பதிலென்ன? அதை உங்கள் சிந்தனைக்கு விருந்தாக்குகின்றேன். உரிமையோடு இடித்துக்கேட்டு பங்குவாங்க வகை இல்லாதவர்களுக்கெல்லாம் மந்திரிப் பதவி! என்ன நாடகமேடை ராஜபார்ட்டா? வடநாட்டுக் கை விரிப்பை நம் சர்க்கார் வெட்கமில்லாமல் பார்த்து ரசித்தது. எனவே, இதுதானா ஆகஸ்டு சுதந்திரம் என்று, நாட்டு நிலையில் நாட்டங்கொண்டிழைக்கும் நாம் கேட்பது எப்படித் தவறாகும்?

உண்மையைச் சொன்னால் துரோகிப்பட்டமா?

இவைகளையெல்லாம் நாம் எடுத்துச்சொன்னால், அரசியல் துரோகிகள் ஆக்கப்படுகிறோம். அடக்குமுறை பாணங்கள் நம்மீது ஏவப்படுகிறது. பேச்சுக்கும் எழுத்துக்கும்கூட தடை, விதிக்கப்படுகிறது.

இத்தகைய பிற்போக்குத்தனம் ஆளவந்தார்களுக்கு அழகல்ல என்பதுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் எச்சரிக்கை! இந்த அவலவாழ்வு கூடாது, அது, மாற வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள்.

முன்றிலும் முன்னேற்றமே!

அரசியலிலும், பொருளாதாரத்துறையிலும், நாம் வடநாட்டுக்கு அடிமைகளாக இருந்து, இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அது போலவே, மதத்தின் பேரால், சாதியின் பேரால், சமயத்தின் பேரால், சாஸ்திர சம்பிரதாயங்களின் பேரால், நம்மை ஐக்கியப் பாட்டுணர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்து, ஆணவத்திருக்கூத்தாடும் ஆரிய வர்ணாஸ்ரமதர்மத்திற்கும் நாம் அடிபணிந்திருக்க முடியாது.

நீண்ட நெடுங்காலமாக ஆழ்ந்த உறக்கத்திலே அமிழ்ந்திருந்த திராவிடத்தை, அந்த ஈரோட்டுக் கிழவர் தட்டி யெழுப்பி, முன்னேற்றப்பாதையை வகுத்துத் தந்தது, நாம் ஆமை வேகத்தில் நகர்வதற்கல்ல: ஆவேசத்தோடு முன்னேறுவதற்காக! எனவே, சோர்வு நீங்கிப் போருக்குப் புறப்படுக என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இறுதிமூச்சுவரை இனப்போரே!

தோழர் அண்ணாதுரை தலைமையில் அணிவகுத்து நிற்கும் அறிவுப் புரட்சிப் படை முன்னேற்றப் பாதையில் எதிர்படும் மேடு பள்ளங்களைக் கண்டு மிரண்டு நிற்காது. இறுதி மூச்சு உள்ளவரை, முன் வைத்த காலைப் பின்னுக்கிழுத்துக் கொள்ளாமல் வெற்றி கிட்டும் வரைப் போராடியே தீரும்!

சனாதனம் சீறும், வைதீகம் வரட்டுக் கூச்சல் போடும்; வடநாடு மிரட்டும்; புல்லுருவிகள் வழி மறித்தும் நிற்பார்கள்! என்றாலும், நமது பயணம் தடைப்படாது ஏன்? நமது இலட்சியம் உயர்ந்தது!

திராவிடம் வட நாட்டு பிடியிலிருந்து விடுபட்டு, தனியரசு கண்டால்தான் நமது வாழ்வில் இன்பம் பொங்கும். இல்லையெனில், நாம் வாழ்ந்தும் நடைப் பிணங்கள், சுவற்றுச் சித்திரங்களே!

வாழ்வு சிறக்க, வறுமை நீங்க, இன்னல் ஒழிய, இடர்கள் அகல—இல்லாமையே இல்லையென்றாக அனைவரும் திராவிட முன்னேற்றக்கழகத்தில் சேர்ந்து பணியாற்றுங்கள். எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் "திராவிட நாடு திராவிடருக்கே" ஆகும் என்பது மட்டும் உறுதி!

விஞ்ஞானம், பயிர்த்தொழில் கட்டாய பாடம்!

பாட்னா, டிச. 5—

பீகாரில் சர்க்கார் உதவி பெறும் 24 உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானமும், பயிர்த்தொழிலும் கட்டாய பாடங்களாக பயிற்சியளிக்கப்படும், என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்காக வருகிற பட்ஜெட்டில், ரூ. 162984 ஒதுக்கப்படும் என்று தெரிகிறது (குளோப்)

ஒலியினும் விரையும் விமானம்!

நியூயார்க், டிச. 5—

சப்தத்தைவிட வேகமாக செல்லக்கூடிய விமானம் ஒன்றை, யு. எஸ். கண்டுபிடித்திருக்கிறது. இது மணிக்கு 800 மைல் வேகம் செல்கிறதாம்.

மாணவர் மன்றம்

சென்னை மாணவர் மன்றத் தலைவர் டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் கீழ்க்கண்ட அறிக்கையை விடுகிறார்:—

"இம்மன்றம் கடந்த பதினெட்டு ஆண்டுகளாகத் தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும் சிறப்பாகத் தமிழ் மாணவர்களுக்கும் பல துறைகளிலும் பாடுபட்டு வருவதைத் தமிழ்நாடு நன்கறியும். இன்று சென்னை மாகாணம் முழுவதிலும் உள்ள ஐந்நூற்றுக்கு மேற்பட்ட கல்லூரிகளும், உயர்நிலைப்பள்ளிகளும், நடுநிலைப்பள்ளிகளும், ஆரம்பப்பள்ளிகளும் இம்மன்றத்தால் பெரும் பயன் பெற்று வருகின்றன. பாப்பா முதல் கல்லூரி வகுப்பில் பயிலும் மாணவ, மாணவியர்வரை, பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள், ஆண்டுதோறும் இம்மன்றத்தார் நடத்தும் பற்பல வகையான போட்டிகளிலும் பங்குகொண்டு மிகுந்த நன்மை அடைந்து வருகிறார்கள். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் பரிசாக வழங்கி வருகிறோம். இம்மன்றத்தார் செய்துவரும் இச்சீரிய முயற்சியை அமைச்சர்களும், கல்வி அதிகாரிகளும், அறிவுடைப் பெருமக்களும் கண்டும் கேட்டும் பாராட்டி, எங்களுக்கு மேலும் மேலும் இத்துறையில் ஊக்கமூட்டி வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வளவு பெரும் பணியைத் தங்களைப்போன்ற அருள் உள்ளம் படைத்த பெருமக்களின் ஆதரவைக் கொண்டே மன்றம் இத்தனை ஆண்டுகளாகச் சிறப்பாகச் செய்து வருகிறது.

மன்றத்தின் பேரும் புகழும் பரவப் பரவத் தேவையும் அதிகமாகி வருகிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் பொருள் வேண்டியிருக்கிறது. இத்தகைய நல்ல முயற்சிக்குத் தங்களைப்போன்றாரின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமென்ற நம்பிக்கையிலேயே இப்பெரும் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம். ஆதலால், என்னுடைய வேண்டுகோளை உணர்ந்து எவ்வளவு அதிகமாகத் தங்களால் அருள் கூர்ந்து உதவ முடியுமோ, அவ்வளவு உதவியையும் புரிய வேண்டுகிறோம். தாங்கள் அருள் உள்ளத்துடன் செய்யும் உதவி எதுவாயினும், அது தங்கள் உள்ளம் போல் எங்கட்குப் பெரிதாக உதவும்.

ஆவன விரைந்து உதவி, மன்ற வளர்ச்சிக்கு மேலும் உதவி புரிய வேண்டுகின்றேன்."

பிரான்ஸ்--பாகிஸ்தான் வர்த்தக ஒப்பந்தம்

கராச்சியில், நவ. 29—ல் பிரான்சுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தைப்பொட்டி, அவ்விரு நாடுகளும் தங்கள் தங்கள் பலதிறப்பட்ட சாமான்களையும் பெருந்த அளவில் பண்டமாற்றிக்கொள்ளுமெனத் தெரிய வருகிறது. 8,000 டன் சணல், 40 000 டன் 'கச்சா' பருத்தி, 5 000 டன் பருத்தி விதை, 1 000 டன் 'கச்சா' கம்பளம், 2,000 டன் தோல்பொருள்கள் ஆகியவற்றை அனுப்பித்தர, பாகிஸ்தான் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ரேடியோ, கிளைமாட்டுக் கருவிகள், எலும்பு முதலியவைகளும் பாகிஸ்தானுக்கு அனுப்பப்படும். இவைகளுக்குப் பதிலாக பிரான்ஸ், பாகிஸ்தானுக்கு பல்வேறு நெசவு, விவசாய, சிவில் என்ஜினியரிங் சாமான்கள் சுமார் 1 கோடி ரூபாய் மதிப்புடையனவற்றை அனுப்பி வைக்குமென அறிவிக்கப்படுகிறது,

அரசியல் "அனுபோக பாத்யம்" காங்கிரசுக்குத்தானு?

'யாரைத்தான் விட்டுவைத்தீர்; எல்லார்க்கும் தடைவிதித்தீர்!

பிச்சைக்காரர்க்கும் பித்துக்கொள்ளிகட்கும் மட்டுந்தான் அரசியலா?

பம்பாய் சர்க்கார் பிறப்பித்திருக்கும் உத்தரவொன்றின்படி, பள்ளி ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது. அரசியல் கட்சி எதிலும் சேருதல்கூடாது, அரசியல் கட்சியெனக் கருதப்படும் ஸ்தாபன மொன்றின் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுதல்கூடாது.

(அரசியல் விழிப்புள்ள இளைஞர்கள், மாணவர்கள் இன்னபிறரது உதவியாலேயே இன்றைய உயர்ந்த நிலையை எய்திவிருக்கும்) நம் தலைவர்கள், மாணவர்கள் அரசியலில் கலந்துகொள்ளக்கூடாதென முன்னரே வரையறுத்துக் கூறியிருக்கின்றனர்.

இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், வீரர்களும் அரசியலில் ஈடுபடுதலை சேனுபதியும் விரும்பவில்லை. கடற்படை, விமானப் படைப்பகுதிகளுக்கும் இத்தடையே இருக்கும்.

சர்க்கார் அதிகாரிகளும் அரசியலில் கலந்துகொள்ளக்கூடாதென்று தான் தடைவிதிக்கப்பட்டுள்ளனர்- ஆட்சியிலுள்ள கட்சிக்கு மட்டும் அவர்கள் முட்டுக் கொடுக்கலாம் (அது அரசியல் இல்லையல்லவா!) இதோ, வயிற்றுப் பிழைப்புக்கு வழி செய்துகொள்வதுதானே அது!

தொழில் மந்திரிகளும், சர்க்கார் அமோதிப்பு முதலாளிகள் ஆதரவு பெற்றபிற செல்வர்களுடன் திகழும் தொழிற்சங்கங்களின் தலைவர்களும் தொழிலாளர்கள் அரசியலில் ஈடுபட்டுத் தொல்லையுறக் கூடாதென்றும் உற்பத்திப் பெருக்கத்திலேயே ஈடுபட வேண்டும் (முதலாளிகட்கு லாபஞ் சேர்த்துத்தர) என்றும் சொல்லிவருகிறார்கள்.

விவசாயிகளும் அரசியலில் கலப்பதினின்றும் எச்சரிக்கப்பட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலேயே முழுசக்தியையும் பயன்படுத்துமாறு வற்புறுத்தப்படுகிறார்கள்.

மாதர்கள் ஆடவர்க்குரிய அரசியல் குப்பை கூளங்களில் ஈடுபடுவதைக் காட்டிலும், வீட்டிலேயே காரியமா யிருக்கலாமெனக் கருதப்பட்டு, வீடே அவர்களுக்குரிய இடமாய்ப் போதிக்கப்பட்டு வருகிறது.

பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்போரும் நடப்பைக் கண்டு கொண்டு பார்த்துவரலாமே தவிர, எந்த தொடர்போ, கட்சிப் பற்றோ கொண்டிருக்கக்கூடாது- ஆட்சியிலுள்ள கட்சியை மட்டும் வேண்டுமானால், பூஜிக்கலாம்!

அறிவாளிகள், கலைஞர்கள், புலமை எழுத்தாளர்கள் ஆகியோரும் அரசியல்பிரச்னைகளையோ (பொருளாதாரப் பிரச்னையோ) சிந்திக்கக்கூடாது!

ஆசிரியர்க்கோ, மாணவர்க்கோ அரசியல் வேண்டாம்; எழுத்தாளர்க்கோ, கலைஞர்க்கோ அரசியல் வேண்டாம்; பெண்டிர்க்கோ, பின் [illegible]ட்கோ அரசியல் வேண்டாம்; [illegible]ிகைகளாளர்க்கோ சர்க்கார் சிப்பந்திகட்கோ அரசியல் வேண்டாம், தொழிலாளர்க்கோ விவசாயிகட்கோ அரசியல் வேண்டாம்!!!

[illegible] மக்களுள் இப்பல்வேறு [illegible]ாருக்கும் அரசியல் வேண்டாமென்றால், வேறு யார்தான் அரசியலில் கலந்துகொள்வார்கள், யார் தான் கலந்துகொள்வார்கள் என்று நீங்கள் கேட்கலாம்.

[illegible]த்து இதோ பதில்: ஓய்வு [illegible] மக்கள் கூட்டத்தார் அரசியலில் கலந்துகொள்வதுபற்றி எவ்வித ஆட்சேபமோ தடையோ இல்லை. சன்யாசிகளும் பிட்சாந்தேகிகளும், பிச்சைக்காரரும் குஷ்டரோகிகளும், பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலுள்ள பித்துக்கொள்ளிகளும், தாய் வயிற்றில் கருவுற்றிருக்கும் குழந்தைகளும் கல்லறையில் புதையுண்டு கிடக்கும் சவங்கள் — இவர்கள் கலந்துகொள்ளலாம் அரசியலில்! 'பிறவி' ஆனால், காங்கிரஸ் அரசியல்வாதிகளும், கட்சித் தலைமையாளர்களும், 'ஆமாம்' போடும் மூத்தண்ணன்களும், முதலாளித்வக் கூட்டத்தாரும் அரசியலில் கலந்துகொள்ள எத்தடையுமில்லை. கடவுள் கடாட்சித்து, சர்க்கார் அங்கீகரித்துள்ளனர் அவர்கள் அரசியலில் வேட்டையாட!

அரசியல் சுமையனைத்தையும் தங்கள் தலையிலேயே தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு, ஏனையோர்க்கு ஒரு சிறிதும் தொல்லை-தொந்தரவு கொடுக்கமனமில்லாது பணியாற்றும் நம் காங்கிரஸ் நண்பர்களின் தொண்டோ, தொண்டு!

—'பிளிட்ஸ்'

இனி நடப்பவை

தேனி— இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பாக 7—12—49 புதன் மாலை 6-மணிக்கு செல்வம் திடலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

திருத்தங்கல்— இவ்வூர் தி. மு. க. செயற்குழுக்கூட்டம், 11-12 49 ஞாயிறு மாலை 4-மணிக்கு "கஸ்தூரி சியக்காய் கம்பெனி"யில் நடைபெறும். செயற்குழுவினரும், மற்ற உறுப்பினர்களும் தவறாது வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

● ● ●

மஞ்சகுப்பம்: தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் தென்னார்க்காடு மாவட்ட 2-வது மாநாடு, 7-12-49 புதன் காலை 9-மணிக்கு, மஞ்சகுப்பம் ஜில்லா போர்டு ஹாலில் நடைபெறும். தோழர் எல். என். பரமசிவம் (த. கா. கி. உ. சங்கத்தலைவர்) தலைமை வகிப்பார். தோழர் ஓ. பி. இராமசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்து வைப்பார்.

பாகிஸ்தான் பெடரல் பல்கலைக் கழகம்

பாகிஸ்தானின் பெடரல் பல்கலைக் கழகம் விரைவில் வேலை துவங்குமென, பாகிஸ்தான் கல்வி ஆலோசனையாளர் அறிவித்துள்ளார். இஸ்லாமியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு திகழுமாம், மேற்படி பல்கலைக் கழகம்.

போகிற போக்கில்...!

"பல குரங்குகள் ஒன்று சேர்ந்து பஸ்ஸர் (பாட்னா) மத்திய சிறையின் கூறையைப் பிரித்து, ஓடுகள் எல்லாவற்றையும் உடைத்துத் தள்ளியிருக்கின்றன. சர்க்கார் அதிகாரிகள் எவ்வளவோ முயன்றும், இந்தக் குரங்குகளின் சேஷ்டைகளை அடக்க முடியவில்லை."

—செய்தி

ரஷ்யாவிலிருந்து ஸ்டாலின் பயிற்சி தந்து அனுப்பி வைத்திருப்பாரோ!

* * *

"ரேடியோவில் நேரு சங்கநாதம்"

—பத்திரிகைச் செய்தித் தலைப்பு

பலாத்கார வெறியர்கள்தான், போர்க்களத்தில் சங்கநாதம் செய்வர்! நாம்தான் அகிம்சை அவதாரங்களாயிற்றே!

* * *

"ரங்கூனிலுள்ள ஒரு இளந் தமிழ் சந்நியாசி, ஏராளமான ஜனங்களை இழுக்கிறார். அவர் விசேஷ மந்திர சக்திகளைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது"

—செய்தி

'ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடு' என்ற மொழி, இந்த இளந் தமிழ் போன்றார்க்கேத் தோன்றியதாமோ! பிழைக்கச் சென்ற இடத்திலும் மௌடிகப் புத்திதானு?

* * *

பர்மாவில் எப்போது சமாதானம் ஏற்படுமென்று மேற்படி சந்நியாசியை பர்மிய சர்க்கார் தூதரொருவர் கேட்டதற்கு, ஐவர் வருவர், சமாதானம் ஏற்படும்' என்று பதிலளித்தாராம்.

—செய்தி

நல்ல காலம்! பரமசிவன் பார்வதி சமேதராய் அந்தண வடிவத்தில் வந்து, கடாட்சித்தருள்வாரென்று சொல்லாதிருந்தாரே! அரசியல் விழிப்புள்ள சந்நியாசி போலும்!

* * *

"பூரி ஜெகன்னாதர் கோயிலிலுள்ள மடைப்பள்ளி தொன்று தொட்டு கிரிராம் சையில் நடந்துவரும் பொதுவுடைமையாகும்"

— சி. ஆர்.

அப்படிச் சொல்லுங்கள் ஆச்சாரியார்வாள்! இப்போ தன்றோ, விஷயம் புரிகிறது மார்க்ஸ்—லெனின்-ஸ்டாலின் குருப்பிலும் நம்மடைப்பள்ளிப் பொதுவுடைமையைத்தான் 'காப்பி' யடித்திருக்கின்றனர்! நம் புஷ்பக விமானத்தைத்தான் ஏரோப்ளான் என்றனர், அக்னியாஸ்திரத்தை அணுக்குண்டு என்றனர்! அதுபோலவே, நம் மடைப்பள்ளி கைவேத்திய முறையை கம்யூனிசம் என்கின்றனர்!

* * *

"ஜல சப்ளையும், சாக்கடைத் திட்டமும் தஞ்சையின் அத்யாவசியத் தேவைகள்"

— கவர்னரிடம் நகரசபை மகஜர்

சர்க்கார் சிக்கனத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் காலம் இது. எந்தச் செலவும் முன் யோசனையுடன்தான் செய்யப்படும். ஜல சப்ளைக்கு வழி செய்து, பின்னர் அதற்காக சாக்கடைத் திட்டத்துக்கும் ஏற்பாடு செய்வதை விட, இரண்டும் வேண்டாமென்றிருந்து விடுவதே புத்திசாலித்தனமான சர்க்கார் வட்டாரங்களில் அபிப்பிராயம் உருவாகலாம்!

* * *

'ஹிந்தி பரவ சமஸ்கிருதமே வழி!

— கே. என். கட்ஜு

சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்க இதுவே வழி!

* * *

'(கவர்னருக்கு) சாமியப்ப முதலியாரின் 'தேனீர்' விருந்து'

—பத்திரிகைச் செய்தித் தலைப்பு

விருந்து 'சப்'பென்றுதான் இருந்திருக்கும்! நீரைக் கலக்காமல், வெறும் கேனை மட்டுமே கொடுத்திருக்கலாம்!

* * *

"கள்ள மார்க்கெட்காரர், கொள்ளை லாபக்காரர் ஆகியோருடன் பொது மக்கள் உறவாடக் கூடாது."

— மந்திரி ஜாஜீவன் ராம்

ச்ஸூ! கோபித்துக்கொள்ளப் போகிறார்கள்! இப்படியா அவர்களைப் பெயரிட்டழைப்பது. இரகசிய லாபக்காரர்களன்றோ, அவர்கள். கள்ள மார்க்கெட்காரர்களைத்தான் தூக்கில்போட்டுவிட்டோமே!

* * *

க்ஷய ரோகத்தைத் தடுப்பதற்கான ஒரே வழி பி. ஸி. ஜி. ஊசி குத்திக்கொள்வதுதான்"

— டாக்டர் கரோல்

சலிபபெருமாள் கோயிலுக்குக் 'கடா' விடுவது இன்னொரு வழி யென்கிறார் எலும்புங் தோலுமாயுள்ள ஒரு அனுபவசாலி இருமிக் கொண்டே!

சென்னை மாவட்ட தி. மு. க. அமைப்புக் கூட்டம்

—————;0:—————

1950-ஜனவரியில் மாநாடும், நாடகமும் நடைபெறும்

சென்னை, டிச 5—

நேற்று மாலை 4-மணிக்கு, சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக்கழகநிர்வாக உறுப்பினர்கள் கூட்டம் "மாலைமணி" அலுவலகத்தில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு 30 வட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் யாவரும் தவறாமல் வந்து கலந்துகொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

1 சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றகழகம் ஒன்றை அமைப்பது எனக் கூட்டம் தீர்மானிக்கிறது.

2. மேற்படி கழகத்திற்கு, தோழர் கே. கோவிந்தசாமி செயலாளராகவும், தோழர்கள் கே. எம். கண்ணபிரான், ஏ. வே சாமி ஆகியோர் உதவிச் செயலாளர்களாகவும், தோழர் சி. வி. ராஜன் விளம்பர உறுப்பினராகவும், தோழர் மு இளையபெருமான் பி. ஏ. பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

3. 1950 ஜனவரி மாதம், 14ந் தேதி, சென்னை மாவட்ட மாநாடும் அன்றிரவு "நல்லமந்தகசடன்" என்ற நாடகம், பொது செயலாளர் அண்ணாத்துரை அவர்களைக் கொண்டு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது

4 மேற்படி மாநாடு நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க கீழ்க்கண்டவர்களைக் கொண்ட ஓர் வரவேற்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

குழுத் தலைவர் :—

தோழர் டி. எம். பார்த்தசாரதி

குழுச் செயலாளர்கள் :—

தோழர் கே. கோவிந்தசாமி

தோழர் ஏ. எஸ். ராமன்

குழு உறுப்பினர்கள் :—

தோழர் மணிமொழியார்

தோழியர் அலுமேலு அப்பாதுரை

தோழியர் சத்தியவாணி முத்து

தோழர் P. வீராகவன்

தோழர் இரா. செழியன்

தோழர் C D T. அரசு

தோழர் பொ. கோதண்டபாணி.

தலைவர் முடிவுரைக்குப்பிறகு, மாலை 6-30 மணிக்கு கூட்டம் முடிவு பெற்றது.

குறிப் :- சென்னை மாவட்டத் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாவரும் தங்கள் முகவரியை, தயவு செய்து தோழர் கே. கோவிந்தசாமி, செயலாளர், சென்னை மாவட்ட தி. மு. கழகம் 2-45, மூர்த்தமாரிச்செட்டித் தெரு, சென்னை என்ற விலாசத்திற்கு தவறாமல் சீக்கிரமாக அனுப்பித் தருமாறு கோரப்படுகிறார்கள்.

கழக சம்பந்தமான விஷயங்களைக் கலந்து பேச செயலாளர் தினசரி மாலை 4-மணி முதல் 6-மணி வரை, மேற்படி கழக அலுவலகத்தில் சந்திக்கப் பேச, வசதி செய்யப்பட்டிருப்பதை பயன்படுத்திக்கொள்ளக் கேட்டுக் கொள்ளுகிறேன். (கி-உ)

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

—————:0:—————

7—12—49

தக்கோலம் :—	இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், வி. முனுசாமி.
தேனி :—	சி. பி. சிற்றரசு, டி. கே. சீனிவாசன்.

மக்கள் மனக் கொதிப்பு அதிகமானால்....?

—(o)—

சர்வாதிகார ஆட்சிகள் சரிவது திண்ணம்

—(o)—

களம்பூரில் தோழர் சிற்றரசு பேச்சு

களம்பூர், டிச. 1—

27—11—49 அன்று மாலை 6-30 மணிக்குத் தோழர் எம். எஸ். கே. பழனிவேலு ரைஸ் மில்லுக்கு அருகிலுள்ள மைதானத்தில், முதியோர் இரவுப் பள்ளித் திறப்பு விழா நடந்தது. முதியோர் இரவுப் பள்ளி நிர்வாகி, தோழர் ர. கணேசன் அவர்கள் முன்மொழிய, திராவிட முன்னேற்றக் கழக விளம்பர உறுப்பினர், தோழர் தெ.கோ. தங்கவேலு வழிமொழிய தோழர் ச. மொ. அண்ணாமலை தலைமை வகித்து முதியோர் இரவு பள்ளியின் அவசியத்தையும், இப்பள்ளியை அரசியலாருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று கேட்டும், அதற்கிணங்காமல் திராவிட முன்னேற்றக்கழகச்சார்பில்நடத்த ஆசைப்பட்டதின் அவசியம் பற்றியும், இதில் 12 வயதுக்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து படிக்கலாமென்றும் கூறினார். அவர் மேலும் தி. மு. க. தோன்றியதைப் பற்றியும், அரசியலாரின் ஆணவப் பிடித்த அடக்குமுறை ஒழிய வேண்டுமானால், நம் போல உள்ளவர்களால் தான் முடியுமென்றும், அதற்கு நாங்களும் எங்கள் தோழர்களும் தயாராக இருக்கிறோமென்றும் காங்கிரசின் அடாத செயல்களைக் கண்டித்துப் பேசினார்.

அடுத்தபடியாக ஆரணி உயர்நிலைப்பள்ளி மாணவத் தோழர் அண்ணாமலை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, அரசியலாரின் அடக்குமுறை, காமராஜரின் அடாத பேச்சு ஆகியவை பற்றி சிறிதுநேரம் உணர்ச்சி ததும்பப் பேசினார்.

அடுத்துத் தோழர் ஆரணி தி. மு. க. துணைச் செயலாளர் இராமகிருஷ்ணன் பேசும்போது,

பெரியாரின் பொருந்தாதிருமணத்தையும், அதனால் விளைந்த விளைவுகளையும், தான் காங்கிரசில் உழைத்ததைப் பற்றியும், இன்றைய காங்கிரஸகாரர்கள் தியாகத்திற்குக் கூலி கேட்கும் இழிநிலையைப் பற்றியும் விரிவாகப் பேசினார்.

இறுதியாகத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், உணர்ச்சி ததும்ப சுமார் 1-30 மணி நேரம் பேசியதின் சுருக்கமாவது :—

தலைவர் அவர்களே ! பெரியோர் அவர்களே !! தாய்மார்களே !!! இன்று கூட்டத்திற்கு சரியானபடி விளம்பரம் செய்யாதிருந்தும், இவ்வளவு மக்கள் கூடியிருப்பதைப் பற்றி பெருமகிழ்ச்சியடைகிறேன். நம் இயக்கப் பற்றுள்ள தோழர் எம்.எஸ்.கே. பழனிவேலு அவர்களின் தாயார் இயற்கை எய்தியமைக் குறித்து, நானும் எங்கள் தோழர்களும் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிற்க,

மது ஒழிந்தபின், மதுவிலக்குப்பிரசாரம் செய்ய ஆட்களை நியமித்து, அதற்காக பல லட்சம் ரூபாயை செலவழிக்க அரசியலாரின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மது ஒழிந்தபின், மதுவருந்ாதீர்கள் எனப் பிரச்சாரம் செய்தால் மதுவருந்தும் மக்கள் "மது எங்கே விற்கப்படுகிறது?" என்று கேட்கமாட்டார்களா ? ஏன் அதிகமான வரிகளைப் போடுகிறீர்கள் என்றால், மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்திற்காக என்கிறார் ஏன் கல்வி நிலையங்கள் அதிகமில்லை என்றால் மதுவிலக்கு ! என்று சொல்லுகிறார்கள். பட்டினி என்றால் மதுவிலக்கு ! உடை என்றால் மதுவிலக்கு என்று எதற்கெடுத்தாலும் மதுவிலக்கு என்று கூறுகிறார்கள்.

மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்யத்தான் வருமான வரி விதித்தார்களே, இன்னும் ஏன் அதையே சாக்குச் சொல்லவேண்டும்? நம் நாட்டில் 100-க்கு 88 பேர்கள் படிக்காமலிருக்க இவ்வாண்டில் 2000 பள்ளிகளை மூடப் போகிறார்களாம், என்னே ஆளவந்தார்களின் அறிவீனம் ! பாரதி விழாவைக் கொண்டாடுகிறார்கள். ஒருவரைப் போற்றுதல் எனின், அவர் கொள்கையையன்றோ கடைப்பிடித்தல் வேண்டும்? அவர் கொள்கையென்ன ? ஆயிரம் அன்ன சத்திரங்கள் கட்டுவதைவிட, பதினாயிரம் கோயில்கள் கட்டுவதைவிட ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் உயர்ந்ததென்று கூறுகிறார். ஆனால் சொல்வேறு செயல் வேறாகவன்றோ இருக்கிறது! இதையெல்லாம் எடுத்துக் கூறினால், 144, 150, 123 என்ற சட்டங்களை பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள். எங்கள் புத்தகங்களுக்குத் தடை. எங்கள் நாடகங்களுக்குத் தடை, பத்திரிகைகளுக்கு ஜாமீன் என அடக்குமுறையை வீசுகிறார்கள். எத்தனை நாட்களுக்கு அடக்குமுறையினால் ஆள முடியும்? ஹிட்லர், ஜார் இவர்களின் ஆட்சி ஏன் சரிந்தது? சைனாவின் கோமிண்டாங் கட்சியின் சர்வாதிகாரியாய் இருந்து சைனாவையே ஆட்டிப் படைத்த சியாங்கேஷேக் இன்று விலாசமில்லாமல் ஊரூராகத் திரிகிறாரே, ஆட்சியிலிருந்தபோது அமெரிக்கா அவரை அளவளாவிப் புகழ்ந்தது, இன்று அசட்டை செய்கிறது. இவரைப்போல்தான் முடிசூடா மன்னர் ஜவஹர்லால் நேருவையும் இன்று அமெரிக்கா அமோகமாக வரவேற்கிறது. ஆனால், சியாங்கேஷேக்குக்கு வந்துற்ற கதிதான் காங்கிரஸ் ஆட்சிக்கும் வரப்போகிறது. இதனை அறிகுறியாகத்தான் காங்கிரசை எதிர்த்து நின்ற சரத்போஸ் அதிகமான ஓட்டுக்கள் பெற்று வெற்றியடைந்துள்ளார். இப்போது நடந்த ஜில்லாபோர்டு தேர்தலில மொத்தத்தில சுயேச்சையாக நின்றவர்கள் தான் அதிக ஓட்டுகள் பெற்றுள்ளனர் இது எதைக் காட்டுகிறது? மக்களின் மனக் கொதிப்பு அதிகமானால் மன்னனும் மண்டியிடுவது நிச்சயம்"

கடைசியாக 20-11-49-ல் வேலூரில் பெரியார் வந்தபோது நடந்த கலவரத்தைப் பற்றி குறிப்பிடுகையில்-அதற்கும் தி. மு. கழகத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும், யாரோ ஒரு சிலர் செய்த கலவரமென்றும் கூறி முடித்தார்.

கால 'வித்தியாசம்'!

சென்னை, டிசம்பர். 5—

இப்பொழுது கிராமபோன் தொழில், நெருக்கடி நிலைமையை அடைந்துள்ளது என்றும், பிரபல சினிமாப் பாட்டுகளால் இத்தொழில் பிழைத்திருக்கின்றது என்றும், சர்க்கார் உதவி இல்லாவிடில், இன்னும் 8 அல்லது 10 வருடங்களில் கிராமபோன் தொழில் மறைந்து விடும் என்றும் இத்தொழில் சம்பந்தப்பட்ட ஒருவர் குளோப் நிருபரிடம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

சினிமாவினாலும், ரேடியோவினாலும் கிராமபோன் ரிகார்டுகளை விற்பனை வெகுவாகக் குறைந்திருக்கின்றன.

பயிர்த் தொழில் யோசனைக்குப் பரிசு 1,000!

பாட்னா, டிச. 5—

பீகாரில் பயிர்த்தொழில் சிறந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம், என்கிற யோசனைகளைத் தெரிவித்து எழுதப்படும் சிறந்த கட்டுரைக்கு ரூ 1000 பரிசு அளிக்கப்படும் என்று பீகார் சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர்.

ஆதித்திராவிடர்களுக்கு வேண்டுகோள்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தோழர்களான எம். ஆறுமுகம், வி. ஆரூன், பி. வினோதீசதாஸ், சே. எம். சிதம்பரம், ஆகியோர் ஆதித்திராவிடர்களுக்கு விடுக்கும்வேண்டுகோள் வருமாறு:—

"என்னை 29—12—47-ல் மன்னார்குடி தாலுகா .... கிராமத்தில், வண்டிச்சக்கரத்தில் கட்டி, இரும்பு குட்டைக்கோலால் அடித்து தடிகொண்டு தாக்கி, சுமார் 15 மணிநேரம் வண்டிச்சக்கரத்திலே கட்டுண்டு கிடக்கச் செய்த ..... மைனர் நடராஜத்தேவன் கொண்டார் மீது தொடுத்த வழக்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின், 24—10—49-ல் மன்னார்குடி நீதிமன்றம், அன்பர் V. நடராஜ குக்கு அளித்த தீர்ப்பு மூன்றுமாத கடுங்காவலும், நூறு ரூபாய் அபராதமும் ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆனால் எதிரி, உயர் நீதிமன்றத்தில் அப்பீல்வழக்குத்தொடுத்திருப்பதால் ஆதித்திராவிட அன்பர்களும், அனுதாபிகளும் ஆக்கம் அளித்து அவரவரால் இயன்ற பொருளுதவிதந்து ஆதரிக்குமாறு வணக்கத்துடன் வேண்டிக்கொள்கிறோம்.

இந்த இரண்டு வருடகாலமாக யாருடைய உதவியும் இன்றி, நெருக்கடிகளைச் சமாளித்து, சுமார் இரண்டாயிரம் ரூபாய் வரையில் எங்கள் சொந்த முயற்சியில் செலவழித்திருக்கிறோம்"

மணமகள் தேவை

மெட்ரிகுலேஷன் வரை படித்த நல்ல அழகுடைய, சுமார் ரூ. 75,000 சொத்து மதிப்புடைய, சொத்து மூலம் மாதம் ரூ. 150-க்குமேல் வருவாயுள்ள நாடார் வகுப்பு பையனுக்குப் பெண் தேவை. பெண் எவ்வகுப்பாயிருந்தாலும் சரியே. விதவையானால் மிகநன்று: எழுதுக

சேகர் c/o சாது,
ஆறுமுகம் கோ,
திருநெல்வேலி ஜில்லா

அமெரிக்கப் பத்திரிகையின் "ஆருடம்!"

நியூயார்க், டிச. 5—

யூகோவுக்கு வெகு அருகாமையிலேயே அணுகுண்டுகள் சேமிக்கப்படுவதை பொட்டி ரஷ்யா மூன்று அம்ச புதுக்கொள்கையை வகுக்கலாம் என்று 'யுனைடெட் நேஷன்ஸ் ஓர்ல்டு' டிசம்பர் இதழில் ஒரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறது.

அவை (1) கம்யூனிஸ்டு சீனாவுடன் நேச உடன்படிக்கை.

(2) இந்தியா, இந்தோனேஷியா இரான் இவைகளுடன், நேச அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்வது. ஆஸ்திரேலியாவும் நியூஜிலாந்தும் இதில் சேரும்படி தூண்டப்படலாம்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து துருப்புகளை வாபஸ் செய்து நடுநிலைமை ஜெர்மனியை அங்கு ஏற்படுத்துவது.

யூகோ தாக்கப்பட்டால் அணுகுண்டு ரஷ்யாவை எதிர்த்துப் பிரயோகிக்கப்படுவது நிச்சயம் என்பதை ஸ்டாலின் அறிந்திருக்கிறார் என்றும், இந்த பலத்தை நம்பியே தான் டிட்டோ இவ்வளவு தைரியமாக மாஸ்கோவுக்கு அடங்காமல் நடந்துகொள்ள தூண்டியிருக்க வேண்டும் என்று ரஷ்யா கருதுகிறதென்றும், அப்பத்திரிகை கூறுகிறது. —குளோப்

விவசாய மசோதா கைவிடப்படும்!

பொதுமக்களிடமிருந்து பாதகமான கருத்துக்களே வந்திருப்பதை அனுசரித்து சென்னை விவசாய மசோதாவை மேற்கொண்டு சட்டமாக்கி அமுல் செய்வதற்கில்லையென்றும், அம்மசோதாவுக்குரிய காலம் இதுவல்லவென்பதை சர்க்கார் உணர்வார்களென்றும் சென்னை விவசாய மந்திரி தோழர் ஏ. பி. ஷெட்டி டிச 3-ந் தேதி யன்று லால்குடியில் கூட்டுறவு விவசாய சங்கமொன்றின் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சாகுபடி செய்யப்பெறாது கிடக்கும் நிலங்களையெல்லாம் சர்க்காரே ஏற்றுக்கொள்ளுதல், நிலநிர்வாகத்தை மாற்றி தக்க நபர்களிடம் ஒப்படைப்பது, உற்பத்திப் பெருக்கத்துக்கான காரியங்களில் ஈடுபடுவது, இன்ன பிறவற்றைச் செய்வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் தருவதாகும் மேற்படி மசோதா.

மறைவு

சென்னை, டிச. 5—

வண்ணையம்பதி தோழர் எம். ஆர். சந்திரன் அவர்கள் துணைவியார், தோழியர் மோகனா அவர்களுக்கு 25-6-49-ல் பிறந்த சேய் "தமிழரசி" 3-12-49 இரவு இயற்கை எய்தியது. மதாசார அடக்கம் செய்யப்பட்டது.

வானொலி

(7-12-49 புதன்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 ஆர். கிருஷ்ணவேணி ராதாகிருஷ்ணன் — வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-30 டி. பட்டம்மாள்—பாட்டு

பிற்பகல் :

12-30 கலாசாலைப்பள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு
2-45 குரல்வகை (இ. த.)

மாலை :

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-30 எம். எஸ். ராமசந்திரா வ் -பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 பி. எல். சரஸ்வதிதேவி— பாட்டு

இரவு :

7-00 என். கே. துரைசாமி— பாட்டு
7-15 தமிழில் செய்திகள்
7-30 கே. தவமணிதேவி-பாட்டு
7-45 டி. பி. கேசவன்—பேச்சு
8-00 ஹேமந்தாதம் (நெடுங்கு நாடகம்)
8-30 எனக்காடு மகாதேவன்— பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ஆங்கிலப் பேச்சு
9-30 எம். கோவிந்தபிள்ளை— புல்லாங்குழல்
10-00 குரல்வகை (இசைத்தட்டு)
10-30 முடிவு.

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை :

7-15 தமிழில் செய்திகள்
7-30 எம். எஸ். முத்தப்ப பாகவதர்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 டி. என். இராஜரத்தினம்- நாகஸ்வரம் (இ. த.)

பிற்பகல் :

12-30 கலாசாலைப்பள்ளிகளுக்கு
1-00 கதம்பம் (இ. த.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 என். குத்தாலலிங்கம்— பாட்டு
2-00 தமிழில் செய்திகள்
2-10 கே. ஆர். கணபதி—புல்லாங்குழல் (இ. த)
2-15 உயர்நிலைப் பள்ளிகளுக்

மாலை :

4-00 ஆரம்பப்பள்ளிகளுக்கு
5-00 ஏ. பாலசரஸ்வதி-வயலின்
5-40 இசைப் பயிற்சி
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 'கடமை' பேச்சு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு :

7-15 தமிழில் செய்திகள்
7-30 'அழகின் எல்லை' நாடகம்
8-00 ரேடியோ வாத்யக்கோஷ்டி
8-30 ஏ. பாலசரஸ்வதி—வயலின்
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 டி. சி. சிவலிங்கம்—பாட்டு
9-35 இசைவேளை (இ. த.)
10-00 முடிவு.

Printed & Published T. M. Parthasarathy at Mercantile Press, 2 Muthumari Chetty St. Madras-1.